தேதி.17.12.2021

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

**OS.No**.241/2018 திரு.கே.ஏ.நஞ்சப்பன் (எ)மகேந்திரன் பி.வா.சா.1

<u>பி.வா.சா.1- இ.ம.எண்.3/2021, இ.ம.எண்.5/2021 ன்படி நீதிமன்ற அனுமதியின் படி திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>

வாதியின் வழக்கறிஞர் மேற்கண்ட ஆவணங்கள் குறித்து வழக்குரையில் குறிப்பிடபடாததால் ஆட்சேபனை செய்த அந்த ஆட்சேபனையின் பெயரில் மேற்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. 29.01.2021-ம் தேதியிட்ட வழக்கு சொத்து பொறுத்து உண்டான வில்லங்க சான்று இணையதள நகல் **பி.வா.சா.ஆ.6**-ஆகவும், 10.04.2014-ம் தேதியிட்ட பிரதிவாதி மற்றும் வாதியின் மனைவி பி.சாந்தி ஆகியோர்களுக்கு இடையே வழக்கு சொத்து சம்பந்தமாக ஏற்படலான கிரைய உடன்படிக்கை பத்திரம் சான்று நகல் **பி.வா.சா.ஆ.7**-ஆகவும், 12.10.2015-ம் தேதியிட்ட வழக்கு சொத்து பொறுத்து பிரதிவாதி மற்றும் வாதியின் மனைவி **P**.சாந்தி ஆகியோர்களுக்கிடையே ஏற்படலான கிரைய உடன்படிக்கை ரத்து பத்திரம் **பி.வா.சா.ஆ.8**-ஆகவும், 29-01.2021 ம் தேதியிட்ட வழக்கு சொத்து பொறுத்து உண்டான வழிகாட்டுதல் மதிப்பு இணையதள நகல் **பி.வா.சா.ஆ.9**-ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை</u>

வில்லங்க சான்றை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் வாதியின் மனைவி சாந்தியிடம் கடன் வாங்கியிருந்தேன். அது தொடர்பான பதிவு இருப்பதால் தாக்கல் செய்துள்ளேன். சாந்தியிடம் கடன் வாங்கியதற்கு என்ன பத்திரம் எழுதியிருந்தேன் என்றால் கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிகொடுத்திருந்தேன். அதில் கடனிற்காக எழுதப்பட்டது என்ற வாசகம் எழுதி இருக்கிறீர்களா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தத்தில் கிரையம் செய்துகொடுப்பதாக எழுதி கொடுத்துள்ளீர் என்றால் சரிதான். எப்போது சொத்தின் மதிப்பு ரூ.7,50,000/- என்று பதிவு செய்து ரூ.5,00,000/-ம் கடன் வாங்கினேன். 18 மாத காலஅவகாசம் முடிந்ததால் இரத்து பத்திரம் எழுதினோம் என்றால் சரிதான். இரண்டு பத்திரங்களிலும் என் மனைவி இந்திரா கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். இரத்து பத்திரம் எழுதப்பட்டது பி.வா.சா.ஆ.8 ஆகும் 12.10.2015 என்றால் சரிதான். நான் வாதி பழனிசாமிக்கு எழுதிகொடுத்த கிரைய பத்திரம் எழுதிகொடுத்தேன் என்றால் இரத்து பத்திரம் எழுதுதற்குதான் கையொப்பம் போட்டேன்.

அப்படி சொல்லிதான் கையொப்பம் வாங்கினார்கள். என் மனைவி இந்திரா பத்தாம் வகுப்பு படித்துள்ளார் என்றால் சரிதான். என் மனைவி ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்த வழக்கில் பி.வா.சா.ஆ.7 மற்றும் பி.வா.சா.ஆ.8 பற்றி சொல்லியுள்ளேன் என்றால் நான் வழக்கறிஞரிடம் சொன்னேன் அவர் பார்த்துகொள்வதாக சொன்னார், என்ன செய்தார் என்று தெரியாது. எனக்கு படிக்கதெரியும். வழக்கறிஞர் எதிர்வழக்குரையை படித்து காண்பித்து, நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் மதிப்பு ஒரு சதுர அடிக்கு ரூ.90 என்று பி.வா.சா.ஆ.9 உள்ளது என்றால் சரிதான். வழிகாட்டி மதிப்பின் படி பி.வா.சா.ஆ.9ன் படி குறைவாக உள்ளது என்றால் வழிகாட்டி குறித்து எல்லாம் எனக்கு அப்போது தெரியாது. கிரைய தேதியில் சதுரடி மதிப்பு 90ரூபாய் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

ஒம்/-திரு.கே.ஏ.நஞ்சப்பன் (எ)மகேந்திரன், பி.வா.சா.1

ஒம்/-என்.ஷர்மிளா,
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.